**ஒபெக் நிதியளிக்கப்பட்ட வீதி வலையமைப்பு அபிவிருத்திச் செயற்திட்டம் - 2021**

ஒபெக் நிதியளிக்கப்பட்ட வீதி வலையமைப்பு அபிவிருத்திச் செயற்திட்டத்தின் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் துறைமுகங்கள், கப்பற்துறை மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சாகவிருந்த தற்போதைய போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை அமுலாக்கல் முகவராகவும் உள்ளது. இலங்கையின் அபிவிருத்திக் கொள்கை மாதிரி வேலையின் ஒன்றிணைந்த பகுதியாக உண்டாக்குதல் மற்றும் மேல், வடமேல், மத்திய, தென் மற்றும் சபரகமுவ மாகாணங்களில் தேசிய நெடுஞ்சாலைகளின் 202 கிலோமீற்றரை தரமுயர்த்துதல் அதேபோல் பாலங்களின் மீள்நிர்மானம் மற்றும் அகலமாக்கல் மூலம் போக்குவரத்து துறையில் துரிதமாக அதிகரிக்கின்ற தேவையை எதிர்கொள்வதற்கு வீதி வலையமைப்பு இணைப்பை முன்னேற்றுவதை இலக்காக கொள்ளல் என்பன செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 7,121.32 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 62.46 மில்லியனானதுடன் அதில் ரூபா 4,560 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 40 மில்லியன் சர்வதேச அபிவிருத்திக்கான ஒபெக் நிதியத்தால் வழங்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. மீதித் தொகை ரூபா 2,561.32 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 22.46 மில்லியன் இலங்கை அரசாங்கத்தினால் வழங்க எதிர்பார்க்கப்பட்டிருந்தது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2013 சனவரி 16 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2016 டிசெம்பர் 31 ஆந் திகதி அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது. இருப்பினும்இ செயற்திட்டத்தின் நடவடிக்கைகளின் பூர்த்தியாக்கல் திகதி 2022 திசெம்பர் 31 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

**1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.1 ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து செம்மையாக்கல்களின் தாக்கத்தை தவிர்த்து, செயற் திட்டத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாரா நிதி நிலைமையியும் நிதிச் செயலாற்றல் மற்றும் அதனது முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் அதனுடன் இனைந்த நிதிக் கூற்றுக்கள் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையானதும் நேர்மையானதுமான நிலைமை ஒன்றை தருகின்றது என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கருத்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கருத்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக உரிய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| இல | கணக்கீட்டுக் குறைபாடுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
| --- | --- | --- | --- |
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இல.08 இன் பிரகாரம் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 2,716 காணித்துண்டுகளிற்கான தாமத வட்டி மற்றும் 2,271 காணித்துண்டுகளிற்கான இழப்பீடு என்பன காணி சுவீகரிப்பு மீதான ஓர் ஏற்பாட்டினை செய்ய அடையாளப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | உடன்பட்டனர். 2022 ஆம் ஆண்டில் வட்டி கொடுப்பனவுகளிற்காக போதியளவு ஏற்பாடுகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். | ஏற்பாடுகள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இல.08 இன் பிரகாரம் செய்யப்படல் வேண்டும். |
| (ஆ) | நிதிக்கூற்றுக்கள் மற்றும் பொதுதிறைசேறியினால் பராமரிக்கப்பட்ட பதிவுகள் என்பனவற்றின் பிரகாரம்இ கடன் வழங்கள்களிலிருந்து பயன்படுத்தப்பட்ட மொத்த செலவினங்கள் ரூபா 75.5 மில்லியன் தொகை மீளாய்வாண்டின் போது ஏற்பட்டிருந்தது. இருப்பினும் உரிய தொகை வெளிவளங்கள் திணைக்களத்தின் பதிவுகளில் ரூபா 52.7 மில்லியன் என காட்டப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக ரூபா 23 மில்லியன் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் கடனின் கீழ் பதிவுசெய்வதற்கு பதிலாக மீளப்பெறத்தக்க வெளிநாட்டு உதவியாக காட்டப்பட்டிருந்தது. மேலும் வித்தியாசங்கள் இணக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டிலிருந்து வெளிவளங்கள் திணைக்களத்தின் அறிக்கை மற்றும் அரச கணக்குகள் திணைக்களத்தின் அறிக்கை என்பனவற்றை இணக்கம் செய்ய கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளது. | மிகுதிகளை இணக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 2.2 சட்டங்கள்,விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

| சட்டங்கள்,விதிகள், பிரமாணங்களுக்கான குறிப்புகள் | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
| --- | --- | --- | --- |
| 2019 மார்ச் 05 ஆம் திகதிய முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இல.01/2019 இன் பிரிவு 9.3. | சுற்றறிக்கைக்கு இணங்க செயற்திட்டத்தின் கண்காணிப்பு குழுவானது 2021 ஆம் ஆண்டு காலத்தின் போது கூடியிருக்கவில்லை. | உடன்பட்டனர். | அனைத்து கண்காணிப்பு குழுக்களும் சுற்றறிக்கை நிபந்தனைகளின் பிரகாரம் அமுல்படுத்தப்பட வேண்டும். |

## 3 பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்றிட்ட செயற்பாடுகளின் பௌதீக செயலாற்றல்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| 2016 ஆம் ஆண்டில் 04 நிர்மான ஒப்பந்தங்களும் பூர்த்தியானதன் பின்னர்இ ஏ005 - பேராதெனிய - பதுள்ள செங்கலடியின் 0+420 தொடக்கம் 3+050 வரையான வீதி பிரிவின் புனர்நிர்மானமானது 2017 ஜுன் 09 இல் ஆரம்பிக்கப்பட்டு 2018 ஜுன் 08 இல் பூர்த்திசெய்ய எதிர்பார்க்கப்பட்டிருந்தது. மேலும் செயற்திட்ட முகாமைத்துவ பிரிவானது 2021 திசெம்பர் 31 வரை ரூபா 126.53 மில்லியன் மொத்த கிரயத்தினை ஏற்படுத்தியிருந்ததுடன் அதில் ரூபா 58.23 மில்லியன் செலவினம் 2017 சனவரி தொடக்கம் 2021 திசெம்பர் வரையான காலப்பகுதிக்காக செலவிடப்பட்டிருந்தது. இருப்பினும் அது மந்தகதியான செயற்திட்ட முகாமைத்துவம் காரணமாக 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கூட பூர்த்திசெய்யப்பட்டிராததுடன் மேலதிக செயற்திட்ட கிரயத்தினையும் செய்யவேண்டியிருந்தது. | ஒப்பந்ததாரர் 2021.12.31 இல் உள்ளவாறு 95.2 சதவீத பௌதீக செயலாற்றலை அடைந்திருந்தார். | புனரமைப்பு வேலைகளை விரைவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 3.2 ஒப்பந்த நிர்வாகம்

| இல | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
| --- | --- | --- | --- |
| (அ) | முதலாவது காலநீடிப்பின் பின்னர் மேலும் காலநீடிப்பு வழங்கப்படாதிருந்தும்இ ஒப்பந்ததாரரின் மந்தகதியான செயலாற்றல் காரணமாக 2021 திசெம்பர் 31 வரை பூர்வாங்கள் மற்றும் பொது கொடுப்பனவு உருப்படிகளிற்காக ரூபா 85 மில்லியன் உள்ளடங்களாக ரூபா 354 மில்லியன் இடைக்கால கொடுப்பனவு பத்திரத்தின் மூலம் செலுத்தப்பட்டிருந்தது. மேலும் ஒப்பந்த பொது நிபந்தனைகளின் உப பிரிவு 8.7 இன் பிரகாரம் ஒப்பந்ததாரரிடமிருந்து அதிகபட்ச தாமத கட்டணங்கள் ரூபா 40.77 மில்லியன் தொகையினை சாட்ட எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது. | கைவிடல் அறிவிப்பு வழங்கப்படும் போது அறவிடப்பட்ட மொத்த தாமத கட்டணங்கள் ரூபா 27 மில்லியனாக இருந்தது. இருப்பினும் ஒப்பந்ததாரர் 06 மாதத்தில் செயற்றிட்டத்தினை பூர்த்திசெய்ய உடன்பட்டிருந்ததுடன் அறவிடப்பட்ட தாமத கட்டணங்களை விடுவிக்க வேண்டியிருந்தார். அதன்படி தலைவர்இ ஆர்டிஏ அதனை விடுவிக்க அனுமதி வழங்கியிருந்தது. | நட்டங்களினை குறைக்க ஒப்பந்த நிபந்தனைகளுடன் இணங்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | செயற்திட்ட பணிப்பாளர் செயற்திட்டத்தின் மந்தகதியான செயலாற்றல் காரணமாக 2019 ஜூன் 18 இல் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் தலைவரிற்கு ''முன்கூட்டிய ஒப்பந்த கைவிடல் அறிவிப்பினை'' அனுப்பியிருந்தார். இருப்பினும் ஓர் எளிதாக்குனருடன் நிர்மானங்களினை செய்வதற்கான ஒப்பந்ததாரரின் வேண்டுகோளினை கருத்தில் கொண்டு புனரமைப்பு வேலைகள் 2019 ஜூலை 01 இல் மீளஆரம்பிக்கப்பட்டிருந்தது. மேலும் ஆலோசகர் குறிப்பிட்ட அளவு செயலாற்றலினை அடைந்திராததனால் 2019 மே இற்கான இடைக்கால கொடுப்பனவு பத்திரத்திலிருந்து ரூபா 27 மில்லியன் திரவ கட்டனத்தினை அறவிட சிபாரிசு செய்திருந்தார். இருப்பினும் ஒப்பந்த பொது நிபந்தனைகளின் உபபிரிவு 8.7 இனை கருத்தில் கொள்ளாது 2019 ஓகஸ்ட் 20 இல் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அனுமதியுடன் சொல்லப்பட்ட தொகையினை தாமத கட்டணமாக அறவிடாமலிருக்க வேலை வழங்குனர் தீர்மானித்திருந்தார். செயற்திட்டமானது ஒப்பந்ததாரரிற்கு ஓர் மேலதிக நிதிவசதியினை வழங்கியிருந்ததுடன் செயற்திட்ட முடிவில் கூட தாமத கட்டணங்களினை அறவிட தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிராமையும் அவதானிக்கப்பட்டது. | உடன்பட்டனர். | நட்டங்களினை குறைக்க ஒப்பந்த நிபந்தனைகளுடன் இணங்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | உரிய ஒப்பந்ததாரரின் கிரயத்தில் செயலாற்றல் பாதுகாப்பு பத்திரத்தினை பெற்றுக்கொள்வதற்கான ஒப்பந்த பொது நிபந்தனையின் உபபிரிவு 4.2 இன் கீழாக செய்யப்பட்ட ஏற்பாட்டிற்கு முரனாக செயலாற்றல் பாதுகாப்பு பத்திரத்தினை வழங்குவதற்கான கிரயத்தினை மேற்கொள்வதற்கு ஒப்பந்ததாரரினை அனுமதிப்பதனூடாக வீதி புனரமைப்பு வேலைகள் மீதான அளவைப்பட்டியலின் வேறான கொடுப்பனவு உருப்படிகள் செய்யப்பட்டிருந்தது. அதன்படி ஒப்பந்ததாரரிற்கு ஓர் பாரிய கூட்டு மொத்தமாக கொடுப்பனவு உருப்படி கூட்டுமொத்தம் ரூபா 1 மில்லியன் செயலாற்றல் பாதுகாப்பு பத்திரத்தின் கிரயத்தினை மீளப்பெற்றுக்கொள்ள பேராதெனிய – பதுளைசெங்கலடி வீதி ஒப்பந்ததாரரிற்கு மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | ஒப்பந்ததாரரை பாரிய கூட்டு மொத்தம் போன்றவற்றை ஓர் தனியான உருப்படியாக பெற அனுமதித்தால்இ வேலை வழங்குனர் ஒப்பந்ததாரருடன் பேரம் பேசுவதுடன் மொத்த ஒப்பந்த பெறுமதி அதிகரிப்பினை தவிர்க்க செயலாற்றல் பாதுகாப்புஇ காப்புறுதிஇ முற்பண பத்திரம் பேன்றனவற்றை பெறுவதற்காக ஏற்பட்ட உண்மையான கிரயத்தினை மதிப்பிடவும் முடியும். | அளவைப்பட்டியல்களின் மீளாய்வு விலைமனு ஆவணங்களை வழங்க முன்னர் பெறுகை நிபுனர்கள் மற்றும் தொழிநுட்ப மதிப்பீட்டு குழு என்பவற்றினால் செய்யப்படல் வேண்டும். |

**3.3 காணி சவிகரிப்புடன் தொடர்புடய விடயங்கள்**

| இல | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | காணி சுவீகரிப்பு செயன்முறையானது 2013 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு 26 வாரங்களிற்குள் காணி நடவடிக்கைகளை துரிதப்படுத்தி விவைபடுத்துவதற்காக கூட்டு மொத்தம் ரூபா 1.82 மில்லியன் ஊக்குவிப்பு கொடுப்பனவுகள் நிலஅளவை திணைக்களத்தின் அமைச்சுஇ மதிப்பீட்டு திணைக்களம் மற்றும் பிரதேச செயலக அலுவலகம் போன்றனவற்றின் உத்தியோகத்தர்களிற்கு செலுத்தப்பட்டிருந்தும் காணி சுவீகரிப்பு செயன்முறை இன்னும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. | பல்வேறு காரணங்களினால் காணி சுவீகரிப்பில் ஓர் தாமதம் உள்ளது. | காணி சுவீகரிப்பு செயன்முறையினை விரைவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம்இ 2இ959 காணித்துண்டுகள் செயற்திட்டத்தினால் கொள்வனவு செய்ய எதிர்பார்க்கப்பட்டிருந்தது. அதில் 688 காணித்துண்டுகளிற்கான இழப்பீட்டு கொடுப்பனவாக ரூபா 244.5 மில்லியன் செலுத்தப்பட்டிருந்ததுடன் ரூபா 31.51 மில்லியன் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 165 காணித்துண்டுகளிற்காக மாத்திரம் தாமத வட்டியாக செலுத்தப்பட்டிருந்தது. மேலும் 146 காணித்துண்டுகள் மாத்திரமே 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கூட காணி சுவீகரிப்பு சட்டத்தின் உபபிரிவு 44 இன் பிரகாரம் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் பதிவு செய்யப்பட்டிருந்தது. | உடன்பட்டனர். | காணி சுவீகரிப்பு செயன்முறையினை விரைவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |